வேலூர் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.2551/அ1/2023 நாள். 19.07.2023

| | |
|---|---|
| பொருள் | தமிழ்நாடு அமைச்சுப் பணி – பயிற்சி – அரசு அலுவலர் பயிற்சி நிலையம் மூலம் இளநிலை உதவியாளர் / உதவியாளர்களுக்கு அடிப்படைப் பயிற்சி – 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் பணிவரன்முறை செய்யப்பட்ட அலுவலர்கள் – முன்னுரிமை அடிப்படையில் பயிற்சிக்கு வராதவர்கள் பெயர் பட்டியல் அனுப்பக் கோரியது – தொடர்பாக |
| பார்வை | தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.43942/அ4/இ4/2023 நாள்.18.07.2023 |

-----

பள்ளிக் கல்வி துறையில் 2018,2019 மற்றும் 2020 ஆண்டுகளில் பணிவரன்முறை செய்யப்பட்டு, பவானிசாகர் அடிப்படைப் பயிற்சிக்கு அனுப்பப்படாத அலுவலர்கள் நிலுவையில் உள்ளனர் எனவும், நிலுவை எண்ணிக்கை முழுமையாக்க் குறையாமல் உள்ளது எனவும், 2018, 2019 மற்றும் 2020 ஆண்டுகளில் பணிவரன்முறை செய்யப்பட்டு, பயிற்சி பெறாதவர்கள் குறித்து விரிவான அறிக்கை அனுப்புமாறும் தெரிவித்து, இளநிலை உதவியாளர் / உதவியாளர்களுக்கான 41 பணிநாட்கள் கொண்ட சுருக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சி அணிகளுக்கு 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் பணிவரன்முறை செய்யப்பட்டு நாளது தேதி வரை பயிற்சிக்கு அனுப்பப்படாமல் உள்ள அலுவலர்களின் பெயர்ப் பட்டியல் மற்றும் பயிற்சிக்கு அனுப்பப்படாதற்கான காரணம் அடங்கிய விவரங்களைக் கீழ்கண்ட அட்டவணைப்படி தயார்செய்து இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு பார்வையில் காணும் செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பார்வையில் காணும் செயல்முறைகளில் தெரிவித்துள்ளவாறு 2018,2019 மற்றும் 2020 ஆண்டுகளில் பணிவரன்முறை செய்யப்பட்டு நாளது தேதி வரை பயிற்சிக்கு அனுப்பப்படாமல் உள்ள இளநிலை உதவியாளர் / உதவியாளர்களின் பெயர் பட்டியல் மற்றும் பயிற்சிக்கு அனுப்பப்படாதற்கான காரணம் அடங்கிய விவரங்களை 19.07.2023 க்குள் Google Spread sheetல் பூர்த்தி செய்து அனுப்பி வைக்குமாறு ஆய்வு அலுவலர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு.படிவம்

19/7/23

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

19/7/2023

பெறுநர்

1.மாவட்டக் கல்வி அலுவலர்கள்.
(இடைநிலைக்கல்வி / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள் /
வேலூர் மாவட்டம்.

2.வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.

3. தலைமை ஆசிரியர்கள், அரசு / நகராட்சி உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள்
வேலூர் மாவட்டம்.